குறுக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம் 3.40PM

அ.வ.எண் 39./2016 நாள் 04.10.2019 மாரியப்பன், த/பெ. பஞ்சநாதன்

PW1 சாட்சியை மீண்டும் அழைத்து விசாரிக்க அனுமதி கோரி 6ம் பிரதிவாதி தரப்பில் வ.மனு எண் 354/19 தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில்

6ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

6ம் பிரதிவாதி பாலசுப்ரமணியனுக்கு எதிராக என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் அன்னதான கொட்டகை போட செலவு செயத தொகையை திருப்பி செலுத்த கோரியுள்ளேன். ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதம் கடைசி சோமவாரத்தில் 6ம் பிரதிவாதி ஏற்பாட்டில் அன்னதானம் நடைபெறுகிறது என்றால் சரிதான். சுமார் 50000 பேர் அன்னதானத்தில் கலந்து கொள்வாரா என்றால் இல்லை சுமார் 15000 பேர். கமிட்டி அமைத்து வசூல் செய்து அன்னதானம் பணி நடைபெறும் என்றால் இல்லை அவர் மட்டும்தான் செய்வார். அவர் வருடாவருடம் வரவு செலவு குறித்து புத்தகம் வெளியிடுகிறார் என்றால் சரிதான். அந்த புத்தகத்தை நான் பார்த்து இருக்கிறேன் என்றால் ஆமாம் ஆனால் அது சரியான கணக்கு கிடையாது. நான் நீதிமன்றத்தில் அந்த புத்தகத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் குறிப்பிட்டு எந்த கணக்கு தவறு என்று பிராதிலோ, முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். ஒவ்வொரு ஆண்டும் மீதமுள்ள தொகையினை அடுத்த ஆண்டு கணக்கில் காட்டுகிறார் என்றால் காட்டுகிறார். கோவிலுக்கு அருகில் உணவு விடுதி இல்லை என்றால் சரியல்ல. மற்ற இதர சோமவாரங்களில் யார் அன்னதானம் செய்வது என்றால் ஊர்க்காரர்கள். அவர்கள் தொன்றுதொட்டு செய்துவருகிறார்களா என்றால் ஆமாம். குறிப்பிட்டு யார் செய்கிறார்கள் என்றால் முதல் சோமவாரம் கணேசன், இரண்டாம் சோமவாரம் பரக்கலக்கோட்டை நாகரெத்தினம், 3வது சோமவாரம் நாகரெத்தினத்தின் சம்மந்தி சண்முக தேவர், 4வது சோமவாரம் 6ம் பிரதிவாதி பாலசுப்ரமணியன். மற்றவர்கள் பந்தல் அமைத்து அன்னதானம் செய்கிறார்களா என்றால் இல்லை கோவில் மண்டபத்தில் வைத்து செய்கிறார்கள். கோவில் மண்டபத்தில் ஒரே நேரத்தில் எத்தனை பேர் அமர்ந்து சாப்பிடமுடியும் என்றால் 600பேர் வரை. இந்த விவரத்தை என் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்சொன்ன நபர்கள் கணக்கு வழக்கு கொடுக்கிறார்களா என்றால் இல்லை அவர்கள் சொந்தமாக செய்கிறார்கள். அவர்கள் கோவிலில் அனுமதி பெற்று செய்கிறார்களா என்றால் ஆமாம். நான் அந்த அனுமதி ஆவணத்தை பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி அன்னதானம் செய்வதால் எனக்கு எந்த நட்டமும் கிடையாது என்றால் சரிதான் கோவிலுக்கு நஷ்டம். நான் அன்னதானம் எதுவும் செய்கிறேனா என்றால் இல்லை. நான் ஏதேனும் கோவிலுக்கு நல்ல காரியம் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன் பெண்களுக்கான கழிப்பறை கட்டி கொடுத்துள்ளேன், சுகாதாரா வளாகம் கட்ட ஈவு தொகை ரூ.40,000 கட்டியுள்ளேன்,

ஷெட் போட்டு கொடுத்தேன் அது புயலின் போது விழுந்துவிட்டது. மேற்சொன்ன பணிகளை செய்வதற்கு கோவிலில் அனுமதி வாங்கினேனா என்றால் இல்லை. மேற்சொன்ன பணிகள் நான் செய்தது சம்மந்தமாக பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 6ம் பிரதிவாதி என் உறவினா் என்றால் சரிதான். கோவில் சம்மந்தமாக எத்தனை வழக்குகள் போட்டுள்ளேன் என்றால் 2 வழக்குகள். கோவில் சொத்து எதுவும் என்னிடம் இல்லை. கோவில் அறங்காவலரிடமிருந்து கிரயம் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். அன்னதானம் செய்யும் நல்ல காரியத்தை தடுக்கும் நோக்கில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோவில் நலனுக்காக வழக்கு போட்டுள்ளதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. எனக்கு எதிராக கோவில் அதிகாரிகளை தாக்கியதாக வழக்கு உள்ளது என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி நல்ல நோக்கில் அன்னதானம் செய்வதை பொருத்து கொள்ளாமல் காழ்புணர்ச்சியால் இவ்வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இத்துடன் குறுக்கு விசாணை முடிக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 4.00PM

Sd/- மாரியப்பன்,

*Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- G. Sathiakumar,

District Munsif, Pattukkottai,(FAC)